**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 25.10.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது.

நாடு முழுவதும் மருத்துவ படிப்புகளுக்கான இடங்கள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டா தெரிவித்துள்ளார்.

முற்றிலும், உள்நாட்டிலே வடிவமைக்கப்பட்ட முதல் நீர்மூழ்கி போர்க் கப்பலான மாஹே, இந்திய கடற்படையில் இணைக்கப் பட்டுள்ளது.

வங்கக் கடல் பகுதிகளில் நேற்று உருவான புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, இன்று காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது.

-------------------------

*மன் கீ பாத்* (10)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், 127 ஆவது மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சி ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், Newsonair மொபைல் செயலியிலும், ஒலிபரப்ப கேட்கலாம். ஆகாஷ்வாணியில், பிரதமரின் ஹிந்தி உரையை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவம் இடம் பெறும். நாளை இரவு 8 மணிக்கு, பிரதமரின் மனதின் குரல் உரையின் தமிழ் வடிவம், புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து ஆகாஷ்வாணி நிலையங்களிலும் மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

-------------------------

*சி.பி ராதாகிருஷ்ணன்* (9)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், மத்திய இணையமைச்சர் திரு. ஜித்தின் பிரசாதா ஆகியோர் இன்று புதுடெல்லியில் சந்தித்து பேசினர். இந்த சந்திப்பின் போது, திரு. அஷ்வினி வைஷ்ணவ், தகவல் ஒலிபரப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து, குடியரசுத் துணைத் தலைவரிடம் தெரிவித்தார். தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிகாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து திரு. ஜித்தின் பிரசாதா அவருக்கு எடுத்துரைத்தாக மத்திய அரசின் செய்தி குறிப்பு தெரிவிக்கிறது.

-------------------------

*நட்டா* (10)

நாடு முழுவதும் மருத்துவ படிப்புகளுக்கான இடங்கள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டா தெரிவித்துள்ளார். புதுடெல்லி எய்ம்ஸ் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்னர், நாடு முழுவதும் 387 மருத்துவ கல்லூரிகள் மட்டுமே செயல்பட்டு வந்த நிலையில், தற்போது 819ஆக அதிகரிக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார். இதேபோல் 51 ஆயிரமாக இருந்த இளநிலை மருத்துவ படிப்புக்கான இடங்கள், தற்போது 1 லட்சத்து 29 ஆயிரமாக அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும் திரு. நட்டா மேலும் தெரிவித்தார்.

-------------------------

*ஜிதேந்திர சிங் (18)*

2047ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கான இலக்கை அடைய பட்டதாரி இளைஞர்கள் பாடுபட வேண்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார். புதுடெல்லியில் உள்ள டெல்லி பல்கலைக்கழக மருத்துவ அறிவியல்

கல்லூரியின் 54ஆவது நிறுவன நாள் மற்றும் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், சுகாதார ஆராய்ச்சியில், உலகளாவிய தரத்தை அடைவதற்கு, சுகாதாரத் துறையில் தனியார் துறையின் பங்களிப்பு இன்றியமையாதது என்று குறிப்பிட்டார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில் விண்வெளி, அணு மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறைகளில், தனியார் துறைக்கு வாய்ப்பு அளிப்பதன் மூலம், பொது மற்றும் தனியார் துறைக்கு இடையிலான இடைவெளி குறையும் என்றும் அமைச்சர் கூறினார். உயிரி தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சித் துறையில் நாட்டின் சமீபத்திய முன்னேற்றங்கள், உள்நாட்டு மரபணு சிகிச்சையில் முதல் வெற்றி, டெங்கு, மற்றும் மலேரியாவிற்கான தடுப்பூசிகளை உருவாக்குவதில் தற்போதைய பணிகள் போன்றவை குறித்தும் திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார். நிகழ்ச்சியில் பட்டதாரிகளுக்கு விருதுகள், பதக்கங்கள், மற்றும் சான்றிதழ்களையும் அவர் வழங்கினார்.

-------------------------

*ஜிஎஸ்டி- ஹரியானா 1* (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த மாதம் 22-ஆம் தேதி முதல் அமலாகும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், ஹரியானாவில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி- ஹரியானா* 2 (17)

**(வாய்ஸ்)**

ஆட்டோ மொபைல்கள், ஜவுளி, உரங்கள், எஃகு, பால், மற்றும், புதுப்பிக்கதக்கவை உள்ளிட்ட பல்வேறு துறைகளில், ஜிஎஸ்டி குறைக்கப் பட்டுள்ளது. திருத்தப்பட்ட வரிக் கட்டமைப்பின் கீழ், ஆட்டோ மொபைல்கள், மற்றும், அவற்றின் பாகங்கள் மீதான ஜிஎஸ்டி, 28 சதவிகித்தில் இருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்

பட்டுள்ளது. இதன்மூலம், வாகனங்களின் விலை குறைந்ததால், விற்பனை அதிகரித்துள்ளது. மேலும், பண்ணை இயந்திரங்கள், மற்றும், உரங்கள் மீதான வரி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதனால், விவசாயிகளின் செலவு குறைந்து, பண்ணை இயந்திரமாக்கலை ஊக்குவிக்க முடியும். சோனிப்பட், கர்னல், மற்றும், பானிப்பட் உள்ளிட்ட இடங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் பால் பொருட்களுக்கான குறைந்த வரி விகிதங்கள், சிறு-குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தொழில் வளர்ச்சி அதிகரித்துள்ளன. மேலும், சந்தை போட்டித் தன்மையை அதிகரித்து, அதிக வேலை வாய்ப்புகளையும் உருவாக்கி உள்ளன. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி வரி விகிதங்களால், கிராமப்புற வேலை வாய்ப்பு அதிகரிக்கப்பட்டு, ஹரியானா மாநிலத்தின் பொருளாதாரம் வலுவடைந்துள்ளது.

--------------------------

*மனோகர்லால்* (5)

தீவிரவாதம் முற்றிலும் ஒடுக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக, மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார். ஐ.நா தினத்தை ஒட்டி, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், அமைதிக்கான எந்தவொரு நடவடிக்கைக்கும், இந்தியா ஆதரவு அளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*பீகார் தேர்தல்* (6)

முதல்கட்ட பீகார் சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் தீவிரமடைந்துள்ளன. இன்று, பாஜக மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, ககாரியா, முங்கர், மற்றும் நாலந்தா உள்ளிட்ட இடங்களில் நடைபெறும் பிரச்சார கூட்டங்களில் உரையாற்றுகிறார். இதற்கிடையில் ககாரியாவில் இன்று நடைபெற இருந்த ஆர்ஜேடி தலைவர் தேசஸ்வி யாதவ்-ன் பொதுக் கூட்டம் ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

--------------------------

*வானிலை (16)*

தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நேற்று உருவான புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, இன்று காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது வரும் 27ஆம் தேதி காலை, மேலும் வலுப்பெற்று, தென்மேற்கு, மத்திய மேற்கு வங்கக் கடலில் புயலாக வலுவடையும் என்றும், இந்த புயலுக்கு மோன்தா என பெயரிடப்பட்டுள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், புதுச்சேரி-காரைக்கால் துறைமுகங்களில் 1ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாம் என மீன்வளத் துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை துவங்கி உள்ள நிலையில், புதுச்சேரியில் அடுத்த 15 நாட்களுக்கு பேனர், கட்-அவுட், மற்றும் பதாகைகள் வைக்க, பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் தடை விதிக்கப் பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்......

**(வாய்ஸ்-கந்தன்)**

-------------------------

*மஹே கப்பல்* (12)

இந்தியாவின் கடலோர பாதுகாப்புத் திறன்களை மேம்படுத்தும் வகையில், முற்றிலும், உள்நாட்டிலே வடிவமைக்கப்பட்ட முதல் நீர்மூழ்கி போர்க் கப்பலான மாஹே, இந்திய கடற்படையில் இணைக்கப் பட்டுள்ளது. கொச்சியில் உள்ள கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இந்த போர்க் கப்பல், கண்காணிப்பு, கடல்சார் செயல்பாடுகள், நீர் மூழ்கி எதிர்ப்பு போர் நடவடிக்கைகள், மற்றும் கடலோர நீரில் கண்ணி வெடிகள் பதிக்கும் பணிகள், உள்ளிட்ட பல கடல்சார் பணிகளை மேற்கொள்ளும் திறன் கொண்டது.

புதுச்சேரியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க துறைமுக நகரமான மாஹேவின் பெயரிடப்பட்ட இந்த கப்பல், இந்தியாவின் வளமான, கடல்சார் பாரம்பரியத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும், உள்நாட்டு கடற்படை கப்பல் கட்டுமானத்தின் ஒரு புதிய அத்தியாயமாகவும் விளங்குகிறது.

-------------------------

*புதுச்சேரி – விமான நிலையம்* (16)

புதுச்சேரியில் இருந்து பெங்களூரு, ஹைதராபாத், மற்றும், ராஜமுந்திரி ஆகிய நகரங்களுக்கு இயக்கப்படும் விமான சேவை, நாளை முதல், அனைத்து நாட்களிலும் இயக்கப்படும் என்றும், இதன்மூலம், ஏனாம், ராஜமுந்திரி போன்ற இடங்களுக்கு செல்லும் பயணிகள், குறிப்பாக, அரசு அலுவலர்கள் பயனடைவார்கள் என்றும், புதுச்சேரி விமான நிலைய இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பிற்பகல் 2.05க்கு புதுச்சேரியில் இருந்து புறப்படும் விமானம், மாலை 3.30 மணிக்கு பெங்களூர் சென்றடையும். பெங்களூரில் இருந்து மாலை 3.55க்கு புறப்பட்டு, மாலை 5.20மணிக்கு புதுச்சேரி வந்தடையும். ஹைதராபத்தில் இருந்து காலை 11.50க்கு புறப்படும் விமானம், பிற்பகல் 1.45க்கு புதுச்சேரி வந்தடையும். மீண்டும் புதுச்சேரியில் இருந்து மாலை 5.40 மணிக்கு புறப்படும் விமானம், இரவு 7.25க்கு ஹைதராபாத் சென்றடையும். அங்கிருந்து இரவு 7.55 மணிக்கு புறபட்டு, இரவு 9.10க்கு ராஜமுந்திர சென்றடையும். விமான சேவைகள் மூலம், பயணர்கள் பயன் பெறுவதோடு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாவும் முன்னேற்றம் அடையும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

-------------------------

*கிரிக்கெட்* (6)

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே, இன்று சிட்னியில் நடைபெற்ற 3ஆவது மற்றும் இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா 1 விக்கெட் இழப்பிற்கு 237 ரன் எடுத்து, 9 விக்கெட் வித்தியாசத்தில்

ஆஸ்திரேலியாவை தோற்கடித்தது. முன்னதாக நடைபெற்ற 2 போட்டிகளில் ஆஸ்திரேலியா 2க்கு 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

-------------------------

டென்னிஸ் (4)

துபாயில் நடைபெற்ற, சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியா, 2 தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

பெண்டிகோவில் நடைபெற்ற ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியா, 9 தங்கம், 5 வெள்ளி பதக்கங்களை வென்றது.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது.

நாடு முழுவதும் மருத்துவ படிப்புகளுக்கான இடங்கள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டா தெரிவித்துள்ளார்.

முற்றிலும், உள்நாட்டிலே வடிவமைக்கப்பட்ட முதல் நீர்மூழ்கி போர்க் கப்பலான மாஹே, இந்திய கடற்படையில் இணைக்கப் பட்டுள்ளது.

வங்கக் கடல் பகுதிகளில் நேற்று உருவான புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, இன்று காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**